**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**<u>O.S.No. 751/2022</u>**

**வா.சா.2.** கல்யாணராமன் 20.01.2023

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

ஈஸ்வரியின் வங்கி கணக்கு எண் .82561011003609 கணக்கில் 31.07.2008 ஆம் தேதி யார் பணம் செலுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் . அவ்வாறு பணம் அந்த வங்கிக்கணக்கில் செலுத்துவதற்கு படிவத்தை யார் பூர்த்தி செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் . 31.07.2008 ஆம் தேதிக்கு பின்னிட்டு பல தேதிகளில் மேற்படி ஈஸ்வரியின் வங்கிக்கணக்கில் பணம் செலுத்தப்பட்டுள்ளது, அந்த பணத்தை யார் செலுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் . 31.07.2008 ஆம் தேதிக்கு பின்னிட்டு வரதராஜ் என்பவருக்கு 04.09.2008 ஆம் தேதி ரூ .1,50,000/– இந்த கணக்கிலிருந்து பணம் கொடுக்கப்பட்டது . வரதராஜ் என்பவரின் பெயருக்கு கொடுக்கப்பட்டுள்ளது, அவர் வாங்கினாரா? இல்லையா? என்பது எனக்கு தெரியாது . பல தேதிகளில் 18.08.2008 ஆம் தேதி முதல் 29.08.2008 ஆம் தேதி வரை நான்கு முறை வாதி ஈஸ்வரி வங்கிக்கணக்கிலிருந்து பணம் பெறப்பட்டுள்ளது , அதை யாரால் பெறப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் , வாதி ஈஸ்வரியே காசோலை மூலம் அவர் எடுத்திருக்கலாம் என்றால் சரிதான் . 16.10.2010 முதல் 17.04.2013 வரை பலமுறை வாதியின் வங்கிக்கணக்கில் பணம் வந்துள்ளது என்று நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளது குறித்து அந்த தொகையை யார் வைப்பீடு செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் , ஆனால் எங்களது வங்கியின் வேறு கிளைகளிலிருந்து வாதியின் கணக்கிற்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது . எந்த கிளையிலிருந்து யாரால் என்ன காரணத்திற்காக செலுத்தப்பட்டது என்ற விபரம் என்னிடம் இல்லை என்றால் சரிதான் , அது எங்கள் கிளையில் இருக்காது . 31.07.2008 ஆம் தேதிக்கு பின்னிட்டு வரதராஜ் பலதேதிகளில் பணம் பெற்றுள்ளார் என்று முதல்விசாரணையில் சொல்லியுள்ளது அவர் அந்த தேதிகளில் நேரடியாக பணம் பெற்றாரா ? இல்லையா? என்ற விபரம் எனக்கு தெரியாமல் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான் , அந்த காலகட்டத்தில் இந்த கிளையில் பணியில் இல்லாததால் எனக்கு தெரியாது . நான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வந்ததற்கு பின்னிட்டு வாதி என்னை எப்போதுமே பார்த்ததில்லை. எனது வங்கியில் வாதியின் கணக்கில் எப்போது யார் , யார் பணம் செலுத்தினார்கள் , பணம் பெற்றார்கள் என்ற விபரம் தெரியாமல்

நான் வாதி அழைத்ததின்பேரில் நான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல . 31.07.2008 ஆம் தேதி மட்டுமே அல்லாமல் பல தேதிகளில் வாதியின் கணக்கிலிருந்து பண பரிமாற்றம் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான்.

**3 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை – இல்லை**

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2023.01.21 16:41:05 +0530